


**25. 10. 2025**

## தலைப்பு செய்திகள்

1. இயற்கை மீதான அன்பை சத்பூஜை பண்டிகை பிரதிபலிப்பதாக பிரதமர் திரு.நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

2. வங்க கடலில் நிலைகொண்டுள்ள காற்றழுத்த தாழ்வு மண்டலம் சென்னைக்கு கிழக்கு, தென்கிழக்கே, தொள்ளாயிரத்து 70 கிலோ மீட்டர் தொலைவில் தற்போது மையம் கொண்டுள்ளது.

3. வடகிழக்கு பருவமழை முன்னேற்பாடாக நிவாரண முகாம்கள் தயார்நிலையில் உள்ளதாக மாநில அமைச்சர் திரு.கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமசந்திரன் தெரிவித்துள்ளார்.

4. தமிழ்நாட்டில் நெல்லின் ஈரப்பதத்தை 22 சதவிகிதமாக உயர்த்துவது குறித்து மத்திய குழுவினர் இன்று ஆய்வு மேற்கொண்டு வருகின்றனர்.

5. சிட்டினியில் ஆஸ்திரேலியாவிற்கு எதிரான 3ஆவது இறுதி ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டியில் இந்தியா வெற்றி பெற 237 ரன் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

## இனி விரிவான செய்திகள்

********

**சத்பூஜை**

இயற்கை மீதான அன்பை வெளிப்படுத்தும் வகையிலும், நல்லிணக்கத்தையும், குடும்ப உறவுகளை பேணிக்காப்பதிலும், சத்பூஜை முக்கிய பங்காற்றுவதாக பிரதமர் திரு.நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

சூரிய வழிபாட்டிற்கான சத்பூஜை வடமாநிலங்களில் கோலாகலமாக கொண்டாடப்படும் நிலையில், இயற்கையோடு இணைந்த இந்த பக்தி பெருவிழாவில் அனைவரும் பங்கேற்று சூரிய பகவானின் ஆசிகளை பெற பிரதமர் வாழ்த்தியுள்ளார்.

இவ்விழா தொடர்பான பாடல்களை மக்கள் அதிக அளவில் பகிர்ந்து கொள்ளுமாறு கேட்டுக்கொண்ட பிரதமர், இதன் மறு பதிவை வரும் நாட்களில் தாம் வெளியிட உள்ளதாக குறிப்பிட்டார்.

சமூகத்தின் மீதான சத்பூஜை விழாவின் ஆக்கப்பூர்வமான பலன்களை சுட்டிக்காட்டிய பிரதமர் நம்பிக்கை, வழிபாடு, பரிவின் ஒருங்கிணைந்த கலவையாக இவ்விழா கொண்டாடப்படுவதாக எடுத்துரைத்தார்.

********

**சத்பூஜை – ரயில்**

சத்பூஜை மற்றும் தீபாவளி பண்டிகைகால கொண்டாட்டங்களுக்கு பின்னர் பயணிகள் தத்தம் பணிகளுக்கு திரும்பும் வகையில் ஆறாயிரம் சிறப்பு ரயில்கள் இயக்கப்படும் என்று ரயில்வே அமைச்சகம் தெரிவித்துள்ளது.

பயணிகளின் கூட்டநெரிசலை சமாளிக்கும் வகையில் இன்றுமுதல் 3 நாட்களுக்கு பீஹாரில் கூடுதல் டிக்கெட் கவுண்டர்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளதோடு, சி.சி.டி.வி. கண்காணிப்பு கேமராவும் பொருத்தப்பட்டுள்ளது.

********

**மன் கீ பாத்**

பிரதமர் திரு.நரேந்திரமோடி அகில இந்திய வானொலியில் மன் கீ பாத் மனதின் குரல் நிகழ்ச்சியில் 127-வது முறையாக நாளைகாலை
11 மணிக்கு உரையாற்றுகிறார்.

பிரதமரின் உரை அனைத்து வானொலி நிலையங்கள், தூர்தர்ஷன், பிரதமர் அலுவலக யூ டியூப் அலைவரிசை உள்ளிட்டவற்றில் நேரடியாகவும், தொடர்ந்து 11.30 மணிக்கும், இரவு 8 மணிக்கும் மொழியாக்கம் இடம்பெறும்.

********

நட்டா

நாட்டில் கடந்த 11 ஆண்டுகளில் மருத்துவ கல்லூரிகளின் எண்ணிக்கை 387-இல் இருந்து 819-ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது என்று மத்திய சுகாதார குடும்பநலத்துறை அமைச்சர் திரு.ஜே.பி.நட்டா தெரிவித்துள்ளார்.

புதுதில்லி எயிம்ஸ் மருத்துவ அறிவியல் கல்வி நிறுவனத்தின் 50ஆவது பட்டமளிப்பு விழாவில் இன்று உரையாற்றிய அவர், MBBS., மருத்துவ இடங்களும் 51 ஆயிரத்திலிருந்து ஒரு லட்சத்து 29 ஆயிரமாக உயர்த்தப்பட்டுள்ளது என்று குறிப்பிட்டார்.

********

வானிலை

வங்க கடலில் உருவான காற்றழுத்த தாழ்வு பகுதி, காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுப்பெற்று, சென்னைக்கு கிழக்கு, தென்கிழக்கே, மற்றும் விசாகப்பட்டிணத்திற்கு தென்கிழக்கே, தொள்ளாயிரத்து 70 கிலோ மீட்டர் தொலைவில் தற்போது மையம் கொண்டுள்ளது.

இது மேற்கு, வடமேற்கு திசையில் நகர்ந்து, நாளை மறுநாள், புயலாக நகரக்கூடும் என்றும்,

தொடர்ந்து அடுத்த 48 மணி நேரத்தில், ஆந்திர கடல் பகுதியை நோக்கி நகர்ந்து, காக்கிநாடா அருகே மசூலிபட்டினம் மற்றும் கலிங்கபட்டினம் இடையே தீவிரபுயலாக கரையை கடக்க கூடும் என்றும், இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதன்காரணமாக வரும் 27ஆம் தேதி வட மாவட்டங்களில் மிக கன மழை பெய்யக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுவதால், மீனவர்கள் கடலுக்குள் செல்ல வேண்டாம் என்றும், ஆழ்கடல் மீனவர்கள் உடனடியாக கரைக்கு திரும்புமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

சென்னை கடலூர் நாகை எண்ணூர், காட்டுப்பள்ளி பாம்பன் தூத்துக்குடி துறைமுகங்களில் ஒன்றாம் எண் புயல் எச்சரிக்கை கூண்டு ஏற்றப்பட்டுள்ளது.

இந்நிலையில் சென்னை, செங்கல்பட்டு, திருவள்ளூர், விழுப்புரம், கடலூர் கன்னியாகுமரி உள்ளிட்ட 12 மாவட்டங்களில் இன்று கன மழை பெய்யக்கூடும் என்றும் வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

********

**K.K.S.S.R**

தமிழகத்தில் வடகிழக்கு பருவமழை முன்னேற்பாடாக போதிய அளவு நிவாரண முகாம்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக மாநில வருவாய் பேரிடர் மேலாண்மை துறை அமைச்சர் திரு.கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமசந்திரன் தெரிவித்துள்ளார்.

சென்னை எழிலகம் பேரிடர் கட்டுப்பாட்டு மையத்தில் இன்று ஆய்வு மேற்கொண்ட பின் செய்தியாளர்களிடம் பேசிய அவர், பல்வேறு மாவட்டங்களில் மழையால் நெற்பயிர்கள் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், உரிய ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு நிவாரணம் வழங்கப்படும் என்றார்.

புயலை எதிர்கொள்ள அனைத்து அலுவலர்களும் தயார்நிலையில் இருக்கவும்,

அத்தியாவசிய பொருட்கள் போதிய அளவில் இருப்பில் வைக்கவும் அறிவுறுத்தப்பட்டுள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

********

**மத்திய குழு**

தமிழகத்தில் நெல் கொள்முதலுக்கான ஈரப்பதத்தை 22 சதவிகிதமாக உயர்த்துவது குறித்து மத்திய குழுவினர் இரண்டு நாள் ஆய்வை இன்று தொடங்கியுள்ளனர்.

மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் மூன்று குழுக்களாக மத்திய குழுவினர் தங்களது ஆய்வை மேற்கொள்கின்றனர்.

இதன்ஒருபகுதியாக செங்கல்பட்டு மாவட்டம் திருக்கழுக்குன்றம் ஒன்றியத்தன் கீரப்பாக்கம் நெல் கொள்முதல் நிலையத்தை முதற்கட்டமாக மத்திய குழுவினர் பார்வையிட்டனர்.

பல லட்சம் ரூபாய் மதிப்பிலான நெல் மூட்டைகள் மழையில் நனைந்து சேதமடைந்ததை இக்குழுவினர் ஆய்வு செய்ததாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**வாய்ஸ்**

இந்த ஆய்வின்போது ஆட்சித்தலைவர் சினேகா மற்றும் சம்மந்தப்பட்ட அதிகாரிகள் உடனிருந்தனர்.

கல்பாக்கம், தத்தலூர், படாளம், கயபாக்கம் உள்ளிட்ட பகுதிகளில் பாதிக்கப்பட்ட இடங்களையும், நேரில் பார்வையிடும் மத்திய குழுவினர் விவசாயிகளையும் சந்தித்து பேசுகின்றனர்.

டெல்டா மாவட்டங்கள், திருவள்ளூர், காஞ்சிபுரம், மதுரை, தேனி மாவட்டங்களிலும் மத்திய குழுவினர் ஆய்வு மேற்கொள்கின்றனர்.

முன்னதாக தொடர் கன மழையால் நெற்பயிர்கள் பாதிக்கப்பட்ட நிலையில் கொள்முதல் செய்யப்படும் நெல்லின் ஈரபதத்தை தற்போதைய 17 சதவிகித்திலிருந்து 22 சதவிகிதமாக மத்திய அரசு

அதிரிக்க வேண்டும் என முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் வலியுறுத்திய நிலையில் இந்த ஆய்வு முக்கியத்துவம் பெறுகிறது.

மத்திய குழுவினர் தங்களது இரண்டு நாள் ஆய்வை முடித்துக்கொண்டு மத்திய அரசிடம் அறிக்கை சமர்ப்பிக்க உள்ளனர்.

அதன் அடிப்படையில் மத்திய அரசு உரிய முடிவுகளை மேற்கொள்ளும் என தெரிகிறது.

********

**பன்னீர்செல்வம்**

தமிழகத்தில் நடப்பாண்டு 9 லட்சம் மெட்ரிக் டன் நெல் உற்பத்தி செய்யப்பட்டுள்ளதாக மாநில வேளாண் அமைச்சர் திரு.எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தெரிவித்துள்ளார்.

காஞ்சிபுரத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், மாநிலத்தில் பல்வேறு இடங்களில் தொடர் கன மழை காரணமாக பாதிக்கப்பட்ட நெற்பயிர்கள் குறித்து கணக்கெடுக்கப்பட்டு, நிவாரணம் வழங்கப்படும் என்றார்.

********

**நெல் கொள்முதல் -திருவாரூர்**

திருவாரூர் மாவட்டத்தில் விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்யப்படும் நெல், ரயில்மூலம், வெளி மாவட்டங்களுக்கு அனுப்பப்பட்டு வருவதாக ஆட்சித்தலைவர் திரு.மோகன சந்திரன் தெரிவித்துள்ளார்.

**வாய்ஸ்**

********

**கன்னியாகுமரி இருவரி**

கன்னியாகுமரி மாவட்டம் காட்டுவிளை அரிசி ஆலையை ஆட்சித்தலைவர் திருமதி அழகுமீனா இன்று ஆய்வு செய்தார்.

நெல் உற்பத்தி நிலையங்கள் மற்றும் அங்குள்ள பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து அலுவலர்களிடம் அவர் கேட்டறிந்தார்.

********

**கன்னியாகுமரி மழை**

கன்னியாகுமரி மாவட்டத்தில் தொடர்ந்து பெய்து வரும் மழை காரணமாக பேச்சிப்பாறை அணையின் நீர்மட்டம், அபாய அளவை தாண்டியுள்ளதை தொடர்ந்து அணைக்கு வரும் உபரி நீர் முழுவதும் வெளியேற்றப்படுவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**வாய்ஸ்**

********

**நெல்லை - மழை**

நெல்லை மாவட்டத்தில் சமவெளி மற்றும் மேற்கு தொடர்ச்சி மலைபகுதிகளில் பெய்து வரும் தொடர் கனமழை காரணமாக பாபநாசம், சேர்வலாறு அணைகளின் நீர்மட்டம் 100 அடியை தாண்டியுள்ளது.

அணைகள் நிரம்பி வருவதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

********

**மழை – கரூர்**

கரூர் மாவட்டம் மாயனூர் காவிரி கதவணைக்கு நீர்வரத்து வினாடிக்கு 70 ஆயிரம் கன அடியாக அதிகரித்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**வாய்ஸ்**

********

**இருவரி**

தமிழகத்தில் சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் திருத்த பணிகள் அடுத்த வாரம் தொடங்கும் என தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் பொதுவிநியோக திட்ட குறைதீர் நாள் முகாம்கள் இன்று நடைபெற்றன.

புதுக்கோட்டை மாவட்டத்தில் பிரதமரின் பயிர் காப்பீடு திட்டத்தின் கீழ் சம்பா நெற்பயிருக்கு வரும் 15ஆம் தேதிக்குள் விவசாயிகள் காப்பீடு செய்துகொள்ளுமாறு ஆட்சித்தலைவர் திருமதி அருணா தெரிவித்துள்ளார்.

********

கிரிக்கெட்

சிட்டினியில் ஆஸ்திரேலியாவிற்கு எதிரான 3ஆவது இறுதி ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டியில் 237 ரன் என்ற வெற்றி இலக்குடன் விளையாடும் இந்தியா சற்றுமுன் 13 ஓவரில் 1 விக்கெட் இழப்பிற்கு, 79 ரன் எடுத்திருந்தது.

முன்னதாக ஆஸ்திரேலியா 47 ஓவரில் 236 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

********

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது